# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1825/25 - 2013 අගෝස්තු මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.08.29

*1825/25 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாண மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கிராம அபிவிருத்தி நியதிச் சட்டம்*

**அறிவித்தல்**

மேல் மாகாணத்தின் போக்குவரத்து, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், கலை மற்றும் கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு, கிராமிய அபிவிருத்தி நடவடிக்கை அமைச்சராகிய ஹேவா மாத்தறகே உப்பாலி கொடிகார ஆகிய நான், மேல் மாகாண மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கிராம அபிவிருத்தி நியதிச் சட்டம் மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் கையொப்பமிட்ட 2013.07.24 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வர வேண்டும் என இங்கு வெளிப்படுத்துகின்றேன்.

ஹேவா மாத்தறகே உப்பாலி கொடிகார,<br>
போக்குவரத்து, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், கலை மற்றும்<br>
கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு<br>
வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு, கிராமிய அபிவிருத்தி<br>
நடவடிக்கை அமைச்சர்,<br>
மேல் மாகாண மாகாண சபை.

**மேல் மாகாண மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க<br>கிராம அபிவிருத்தி நியதிச் சட்டம்**

மேல் மாகாணத்தினுள் கிராம அபிவிருத்தி செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை, கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபையையும் கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபையையும் அமைப்பதற்கான ஏற்பாடுகளை ஏற்படுத்தவும், அதனோடு தொடர்புடைய இடைநேர் விளைவான எல்லா விடயங்களையும் மேற்கொள்வதற்கும், 1998 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கிராம அபிவிருத்தி நியதிச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்குமான நியதிச் சட்டம் ஒன்றாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு அமுல்படுத்தப்படுகின்றது :-

*பகுதி I*

குறுந்தலைப்பும் நடைமுறைக்கு வரும் தினமும்.

1. இந்த நியதிச் சட்டம் மேல் மாகாண சபையின் "2013 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, கிராம அபிவிருத்தி நியதிச் சட்டம்" என அறிமுகப்படுத்தப்படுவதுடன், மேல் மாகாணத்தில் ஆளுநரின் அனுமதி கிடைத்த நாளில் இருந்து அது நடைமுறைக்கு வரவேண்டும்.

நோக்கமும் குறிக்கோளும் செயற்பாடுகளும்.

*2.* மேல் மாகாண சபையின் அதிகார பிரதேச மக்களின் திறமைகளையும், உழைப்பையும் அபிவிருத்தி செய்து அவர்களது திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார, சமூக மற்றும் கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்வதற்காக பின்வரும் விடயங்களில் ஈடுபட முடியும்.

(அ) கிராம அபிவிருத்திச் சங்கம்/மகளிர் அபிவிருத்திச் சங்கம் அமைத்தலும் பதிவு செய்தலும் நடாத்திச் செல்லலும் ;

(ஆ) கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையை ஒழுங்கு செய்தலும் அமைத்தலும் கொண்டு நடாத்திச் செல்லலும் ;

(இ) கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபையை ஒழுங்கு செய்தலும் அமைத்துலும் கொண்டு நடாத்துதலும் ;

(ஈ) கிராம அபிவிருத்தி மாகாண அபிவிருத்தி சபையை ஒழுங்கு செய்தலும் அமைத்தலும் கொண்டு நடாத்துதலும் ;

(உ) மகளிர் மேம்பாட்டு பயிற்சி நிலையத்தினை ஸ்தாபித்தல், பேணிச் செல்லுதல் ;

(ஊ) கிராம அபிவிருத்திக்காக நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ;

(எ) கிராம மக்களின் பொருளாதாரம், ஜீவனோபாய வழிகளைக் கட்டி எழுப்புவதற்கு பயிற்சி மற்றும் விற்பனை மத்திய நிலையங்களை அமைத்துக் கொண்டு நடாத்துதல் அத்துடன் பயிற்சி நடவடிக்கைகளுக்காக சான்றிதழ்களை வழங்குதல் மேற்பார்வைக்கு மேலதிகமாக அங்கத்தவர்களின் நிதியின் பாதுகாப்பிற்காக கிராம அபிவிருத்திக்கு உரிய வங்கி ஒன்றினை ஸ்தாபித்தல் அதன் நிர்வாக அதிகாரம் கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்படுகின்றது. இதற்கிணங்க பிரதேச மட்டத்தில் மற்றும் மாவட்ட மட்டத்தில் கிராம அபிவிருத்திக்காக வங்கி ஸ்தாபிக்கப்படுகின்றது. அவ் வங்கிகளின் மேலதிக நிதி அரச வங்கி ஒன்றில் வைப்பிலிடப்பட வேண்டும் ;

(ஏ) கிராம அபிவிருத்தியை முன்னிட்டு நடைபெறும் கிராம சேமிப்பு வைப்பினைச் சேர்த்தல், முதலீடு மற்றும் கடன் வழங்குதல் மற்றும் மேம்பாடு தொடர்பான தாபன முகாமைத்துவமும் மேற்பார்வையும் ;

(ஐ) கிராம அபிவிருத்திக்காக அமைக்கப்படும் அரச மற்றும் அரசு ஏற்றுக்கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புக்களின் ஊடான தொடர்புகள் ;

(ஒ) மாகாண, கிராம அபிவிருத்தி நிதியம் ஒன்றை அமைத்தலும் கொண்டு நடாத்துதலும் ;

(ஓ) யாதாயினும், அசையும் அல்லது அசையா சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு, பொறுப்பேற்க, குத்தகைக்கு அல்லது வாடகைக்கு கொடுப்பதற்கு அல்லது பெறுவதற்கு, ஈடுவைக்க, விற்க அல்லது ஏதாவது ஒரு முறையில் வெளியேற்றல்.

## பகுதி II

மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தை ஸ்தாபித்தல்.

*3. (1)* இந்நியதிச் சட்டத்தின் நோக்கம், குறிக்கோள் மற்றும் விடயங்களை மேற்கொள்வதற்காக மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர் மற்றும் அத்துடன் (இதனகத்துப் பின் கிராம அபிவிருத்தி ஆணையாளர்) அவருக்கு ஒத்துழைப்பு நல்குவதற்காக அரச உத்தியோகத்தர்களைக் கொண்ட கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஒன்று இங்கு ஸ்தாபிக்கப்படுகின்றது.

(கிராம அபிவிருத்தி பணிப்பாளர் திணைக்களத்தின் தலைவர் ஆகுவதுடன் அவர் இலங்கை நிர்வாக சேவையின் II ஆவது வகுப்பு உத்தியோகத்தர் ஒருவராக வேண்டும்.)

*(2)* அமைச்சரின் பொதுவான அல்லது விஷேடமான ஏற்பாடுகளின் கீழ் பணிப்பாளர் செயலாளரின் ஆலோசனையின் கீழ் இந் நியதிச் சட்டத்தை நிர்வாகம் செய்யும் பொறுப்பிற்காகச் செயற்பட வேண்டும்.

4. (1) திணைக்களத்தின் விடயங்களை மேற்கொள்வதற்காக பணிப்பாளருக்கு ஒத்துழைப்பு நல்குவதற்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள், மாகாண கிராம அபிவிருத்தி சேவையின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு மற்றும் திறமையின் கீழ் நியமிக்கப்படும் கிராம அபிவிருத்தி உதவி பணிப்பாளர்கள், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட தையல் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் தையல் பயிற்றுவிப்பாளர்கள் அத்துடன் திணைக்களத்தின் விடயங்களுக்கு ஒத்துழைப்பின் நல்குவதற்கு அவசியம் எனக் கருதும் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களைக் கொண்டதாக வேண்டும்.

*உத்தியோகத்தர்களை நியமிக்கும் அதிகாரம் மற்றும் விடங்கள்.*

(2) அமைச்சரின் பொதுவான கட்டளை மற்றும் நிர்வாகத்தின் கீழ் பணிப்பாளர் மற்றும் வேறு உத்தியோகத்தர்களினால் இந் நியதிச் சட்டம் மற்றும் அதன் கீழ் தயாரிக்கப்படும் கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டியதுடன் இவ் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் பொறுப்பும் அவர்களுக்கு உரியதாகும்.

(3) மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர், கிராம அபிவிருத்தி விடயப் பொறுப்பு திணைக்களத்தின் தலைவர் ஆவார். அவரது அதிகாரங்களும், பொறுப்புக்களும், கடமைகளும் உரிய அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படுவதுடன் கிராம அபிவிருத்தி நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர் அமைச்சின் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் செயற்பட வேண்டும். தண்டனைக் கோவையின் கீழ் பார்க்குமிடத்து கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் எல்லா உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அரச சேவையாளர்களாக கருதப்பட வேண்டும்.

*மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர்.*

## *பகுதி III*

5. (1) மேல் மாகாண சபையின் அதிகார பிரதேசத்தில் வசிக்கும் கிராம மற்றும் நகர மக்களின் பொருளாதார, சமூக, சுகாதார, கல்வி, நாகரீக, கலை அம்சங்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்று அல்லது மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்று அல்லது அப்படி இல்லாதவிடத்து அவ்வாறான இரண்டு வகையான சங்கங்களையும் ஸ்தாபிக்கலாம். மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கம் ஒன்றுக்காக பெண்கள் மட்டுமே அங்கத்துவத்தினை வகிக்க வேண்டும்.

*கிராம அபிவிருத்திச் சங்கங்களை ஸ்தாபித்தல், அதிகார பிரதேசம் மற்றும் ஆரம்பக் கூட்டம்.*

(2) இங்கு கிராமமாக கிராம சேவர் பிரிவு அல்லது பாரம்பரிய ரீதியில் இனங்களினுள் சம ரீதியாக பிரிப்புக்களுடன் கிராமம் அல்லது கட்டடம் அல்லது தோட்டப் பிரிவொன்றுடனான குடியிருப்பு ஒன்றை அல்லது நகர குடியிருப்பொன்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அதிகார பிரதேசத்தினைத் தீர்மானிக்கும் போது பிரதேச செயலாளரினால் கிராம உத்தியோகத்தரினதும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரினதும் ஒத்துழைப்புடன் மேலே கூறப்பட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்க வேண்டும்.

(3) கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றை ஸ்தாபிக்கும் ஆரம்பக் கூட்டம் ஒன்றுக்கு தீர்மானிக்கப்பட்ட அதிகாரப் பிரதேசத்தின் குடும்பங்களில் ஆகக் குறைந்தது 20 குடும்பங்களாவது பங்குபற்ற வேண்டும்.

(4) மேற்குறித்த கிராமத்தில் வசிக்கும் மக்களின் பொருளாதார, சுகாதார, கல்வி, நாகரீக மற்றும் கலாசார நடவடிக்கையை மேம்படுத்துவதற்காக கிராம அபிவிருத்திச் சங்கங்களினால் மேற்கொள்ளப்படும் கிராம மட்டத்திலான திட்டம் ஒன்று ஒரு குறித்த கால எல்லை ஒன்றுக்குள் இருக்க வேண்டியதுடன் அத்திட்டத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான நிதி உதவி மற்றும் வேறு உதவிகளை வழங்குவது மேல் மாகாண சபையினதும், சங்கம் அமைந்துள்ள அதிகார பிரதேசத்தின் உள்ளூராட்சி ஸ்தாபனங்களினதும் பொறுப்பாகும். இதற்காக தொண்டர் ஸ்தானங்கள் அரச மற்றும் அரச சார்பற்ற ஸ்தாபனங்களுக்கு, கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு உதவி வழங்குவதற்காக இடமுண்டு.

6. (1) இங்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்காக இந்நியதிச் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள யாப்பு அதன் 1, 2 மற்றும் 3 ஆகிய பிரிவுகளுக்கு மட்டும் உரிய மாற்றங்களுடன் உரியதாக்கிக் கொள்ள வேண்டும்.

*கிராம அபிவிருத்திச் சங்கத்தின் யாப்பு, சங்கத்தின் பதிவு மற்றும் அதிகாரம்.*

(2) இங்கு கிராம அபிவிருத்திச் சங்கம் இடையறாது இயங்குவதும் பொது இலட்சினை ஒன்று காணப்படும் கூட்டுத்தாபனம் ஒன்றாகுவதுடன் அதற்கு சங்கத்தின் நோக்கங்களுக்கு இணங்கிய உடன்படிக்கைகளை ஏற்படுத்த அதிகாரம் உண்டு. கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பெயரில் மற்றும் தற்றுணிப்பில் அதனால் வழக்கு தொடரலாம், தொடரப்படலாம்.

(3) அக்கிராம அபிவிருத்திச் சங்கத்தின் விடயங்களுக்காக உரிய பிரதேசத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரினால் அந்தந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரிய விடையத்துறை தொடர்பாக அறிவொன்றுள்ள எந்தவொரு உத்தியோகத்தர் ஒருவரையும் அழைப்பதற்கு சந்தர்ப்பம் காணப்படுவதுடன் அங்கு அவ் உத்தியோகத்தர் அவருக்குரிய துறை தொடர்பான ஆலோசனையாளராவர். எனினும் சங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக அவருக்கு வாக்களிக்கும் அதிகாரம் இல்லை.

(4) இந்நியதிச் சட்டத்தின் மூன்றாவது பகுதியின் 5 ஆவது பிரிவின் (1), (2), (3), (4) உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஸ்தாபிக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பதிவிற்காக கீழே காட்டப்படும் ஆவணங்கள் சரியான முறையில் தவறின்றி 2 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுடன் ஒரு மாதத்தினுள் உரிய பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(அ) இந்நியதிச் சட்டத்தின் II ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்கியபடி சங்கத்தினை பதிவு செய்யும் விண்ணப்பப்படிவம் ;

(ஆ) அங்கத்துவப் பெயர் பட்டியல் ;

(இ) ஆரம்பக் கூட்டத்தின் அறிக்கை ;

(ஈ) சபையில் நிறைவேற்றப்பட்ட யாப்பு ;

(உ) உத்தியோகத்தர் குழாமும் செயற்குழுவின் பெயர்பட்டியலும் .

அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் பிரதேச செயலாளரினால் பரிசோதிக்கப்பட்டு திருப்தி அடைந்த பின்னர் தகைமை பெற்றால் அங்கீகரிக்கப்பட்டு பதிவு செய்யும் ஏட்டில் குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டு கிராம அபிவிருத்திப் பணிப்பாளருக்கு பிரதி ஒன்றுடன் இந்நியதிச் சட்டத்தின் IV ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்கியபடி பதிவுச் சான்றுதல் ஒன்றை சங்கத்துக்கு வழங்க வேண்டும். ஏதாவது ஒரு சங்கம் ஒன்று உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்ட தினத்தில் இருந்து ஒரு மாதம் முடியும் வரை பதிவு செய்யாதவிடத்து அவ் உத்தியோகத்தர் குழாம் இரத்தாகுவதுடன் இதற்கிணங்க மீண்டும் ஒரு முறை உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

பதவிக்காலம்.

(5) மேலே 6 (4) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பதிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம்/மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றின் உத்தியோகத்தர் குழாம் ஒன்றின் பதவிக் காலம் அவர்கள் தெரிவு செய்யப்பட்ட தினத்தில் இருந்து 2 ஆண்டுகளாக வேண்டும். அந்த 2 பஞ்ஞாங்க வருடங்களுக்குள் பதவி வெற்றிடமாகிய உத்தியோகத்தர்களுக்காக 3 மாதங்களினுள் புதிய உத்தியோகத்தர் குழாம் ஒன்று தெரிவு செய்யப்பட வேண்டும்.

அவ்வாறு 3 மாதங்களினுள் புதிய உத்தியோகத்தர்குழாம் ஒன்றினை தெரிவு செய்ய முடியமால் போனால் அந்த 03 மாதங்கள் நிறைவடைந்த தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் பிரதேச செயலாளர் அல்லது கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரினால் கிராம உத்தியோகத்தரின் மூலம் பொதுச் சபையினைக் கூட்டி புதிய உத்தியோகத்தர் குழாம் ஒன்றினை தெரிவு செய்ய வேண்டும்.

பதவிக்காலம் நிறைவடைந்த புதிய உத்தியோகத்தர் குழாம் ஒன்று தெரிவு செய்யப்படும் வரை சங்கத்தின் எல்லா நடவடிக்கைகளுக்கும் பழைய உத்தியோகத்தர் குழாம் பொறுப்பாக வேண்டும்.

(6) இந்நியதிச் சட்டத்திற்கு இணங்க கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றினை ஆரம்பிக்கும் அல்லது புதிய உத்தியோகத்தர் குழாம் ஒன்றை தெரிவு செய்யும் அக்கூட்டத்திற்கு உரிய கிராம அபிவிருத்தி மற்றும் உத்தியோகத்தர் பிரதேச செயலாளரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஏதாவது ஒரு உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்களில் ஒருவர் கலந்து கொள்ள வேண்டும்.

(7) கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிதியாண்டு பஞ்ஞாங்க ஆண்டாக வேண்டும். பஞ்ஞாங்க ஆண்டு நிறைவடைந்த 4 மாத காலத்தினுள் நிதி வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்குரிய வரவு செலவுத் திட்ட அறிக்கை கணக்காய்வு செய்து நிறைவேற்றப்பட்டு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் மூலம் பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பான வரையறைகள் கௌரவ அமைச்சரினால் காலத்திற்கு காலம் அமுல்படுத்தப்படும் விதிகளின் மூலம் நியமப்படுத்தப்பட வேண்டும். இப்பிரிவின் ஏற்பாடுகளை ஏதாவது சங்கம் ஒன்றினால் மீறப்படும் சந்தர்ப்பத்தில் அச்சங்கத்தை இடை நிறுத்தி விசாரணைக்கு உட்படுத்த இயலும்.

(8) உரிய பிரதேச செயலாளர் பிரிவின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி நிலையில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின்/மகளிர் சங்கத்தின் ஆலோசனையாளர் ஆகுவதுடன் எல்லா மேற்பார்வை நடவடிக்கை மற்றும் கிராம அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பான பொறுப்பு அவருக்கு உரியதாகும்.

(9) கிராம அபிவிருத்தி சங்கத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்படும் எந்தவொரு கருத்திட்டமொன்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் இடம்பெற வேண்டும்.

(10) சங்கத்தின் அதிகாரப் பிரதேசம், அங்கத்துவத்தை வழங்குதல், உத்தியோகத்தர்களை தெரிவு செய்தல் பரிமாற்றப்படும் கடித ஆவணங்கள் சங்கத்துக்குரிய அசையும் அசையா சொத்துக்கள் மற்றும் சங்கத்தின் நடவடிக்கை தொடர்பான பிரச்சினை ஒன்று தோன்றும் இடத்து பிரதேச செயலாளரினால் அது தொடர்பாக முடிவிற்கு வர முடியாத சந்தர்ப்பத்தில் முடிவை எடுப்பதற்காக கிராம அபிவிருத்தி பணிப்பாளருக்கு அனுப்பப்பட வேண்டும். அம் முடிவு தொடர்பாக திருப்திப்படாத விடத்து 30 நாட்களுக்குள் மாகாண விடயப் பொறுப்பு செயலாளருக்கு ஒரு மேன்முறையீடொன்றை மட்டுமே சமர்ப்பிக்க இயலுவதுடன் செயலாளரின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

## பகுதி IV

7. (1) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். அந்த அதிகார சபை பிரதேச செயலாளர் பிரிவில் ஸ்தாபிக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம் , மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் தவிசாளர்களையும் மற்றும் செயலாளர்களையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபைகளை ஸ்தாபித்தல், பிரதேச அதிகார சபைகளின் நோக்கம் மற்றும் அதன் காரியங்கள்.

(2) பிரதேச அதிகார சபையின் நோக்கம் –

(அ) கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்களை மேம்படுத்துவதற்காக உதவிகளைப் பெற்றுக் கொடுத்தலும் வழிகாட்டலும் ;

(ஆ) அச்சங்கங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒத்துழைப்பு நல்குதல் ;

(இ) மாவட்ட அதிகார சபைகளை அங்கத்துவம் செய்தல் ;

(ஈ) பிரதேச கிராம அபிவிருத்தி திட்டங்களை தயாரித்தல் ;

(உ) பிரதேச மக்களின் பொருளாதார, சமூக, கலாசார, ஸ்தாபன நிலைகளை உயர்த்துதல் ;

(ஊ) வேறு சங்கங்கள் நிறுவனங்களுடன் தொடர்பினைக் கட்டி எழுப்புதல் மற்றும் அதனூடாக பிரதேச அபிவிருத்தியை கட்டியெழுப்புதல்.

(3) இந்த பிரதேச அதிகார சபையின் நன்மைக்காக இந்நியதிச் சட்டத்தின் III ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்கியபடி மாகாண சபையின் கிராம அபிவிருத்தி பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பிரதேச அதிகார சபையின் யாப்பு ஒன்று இருக்க வேண்டும். அந்த யாப்பானது சங்கத்தை ஸ்தாபிக்கும் போது பெரும்பான்மையோரினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். பணிப்பாளரினால் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள யாப்பில் ஏதாவது மாற்றம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அங்கத்தவர்களின் 3/4 பங்கினர் பங்குபற்றும் கூட்டத்திற்கு வருகை தந்த எண்ணிக்கையில் 2/3 அளவிலான வாக்கின் அடிப்படையில் யாப்பு திருத்தப்பட வேண்டும். அத்திருத்தப்பட்ட யாப்பு மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற தினத்தில் இருந்து நடைமுறைக்கு வர வேண்டும்.

(4) கிராம அபிவிருத்திப் பிரதேச அதிகார சபையின் தவிசாளர் கிராம அபிவிருத்திச் சங்கம்/மகளிர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் தவிசாளர்கள்/செயலாளர்களில் இருந்து நியமிக்கப்பட வேண்டியதுடன் பிரதேச அதிகார சபையின் செயலாளராக அப்பிரதேச அதிகாரசபை அமைந்துள்ள பிரிவின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி நிலையில் நியமிக்கப்பட வேண்டும். அப்பிரதேச அதிகார சபை அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பதவியின் அடிப்படையில் அதன் தலைவராக வேண்டும்.

(5) கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களின் அங்கத்துவத்தில் இருந்து மாவட்ட அதிகார சபை ஸ்தாபிக்கப்படும்.

கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபையை ஸ்தாபிதல் மற்றும் அதன் நோக்கமும் அதிகாரமும்.

(6) மாவட்ட அதிகார சபையின் நோக்கமானது –

(அ) மாவட்டத்தினுள் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் மேம்பாட்டிற்காக ஒத்துழைப்பு நல்குதல், ஆலோசனை மற்றும் உதவிகள் வழங்குதல் அத்துடன் வழிகாட்டலை மேற்கொள்ளல்.

(ஆ) பிரதேச அதிகார சபைகளின் கிராம அபிவிருத்தித் திட்டங்களை ஒன்று சேர்த்து மாவட்ட கிராம அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல் ;

(இ) மாவட்டத்தில் காணப்படும் நிர்வாக இயக்கங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டு மாவட்ட அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல் ;

(ஈ) மாவட்டத்தினுள் காணப்படும் ஏனைய இயக்கங்களுடன், சங்கங்களுடன் ஒத்துழைப்பு மேம்படுமாறு செயற்பட்டு மாவட்ட அபிவிருத்தி திட்டத்தினை நடைமுறைப்படுத்த தேவையான ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளல் ;

(உ) மாகாண அதிகார சபைகளை அங்கத்துவம் செய்தல்.

(7) இந்த கிராம அபிவிருத்தி மாவட்ட சங்கங்களின் நன்மைக்காக இந்நியதிச் சட்டத்தின் IV ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின்படி மாகாண சபையின் கிராம அபிவிருத்தி பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட யாப்பு ஒன்று இருக்க வேண்டியதுடன், அந்த யாப்பானது மாவட்ட அதிகார சபையை ஸ்தாபிக்கும் போது பெரும்பான்மையோரினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். பணிப்பாளரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள யாப்பில் ஏதாவது மாற்றும் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அங்கத்தவர்களின் 3/4 பங்கினர் பங்குபற்றும் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள எண்ணிக்கையில் 2/3 அளவிலான வாக்கின் அடிப்படையில் யாப்பு திருத்தப்பட வேண்டும். அந்த திருத்தப்பட்ட யாப்பு மாகாண, கிராம அபிவிருத்திப் பணிப்பாளரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற தினத்தில் இருந்து நடைமுறைக்கு வர வேண்டும்.

(8) மாவட்ட அதிகார சபையின் தவிசாளர் கிராம அபிவிருத்தி பிரதேச சபைகளின் தலைவர்களில் இருந்து நியமிக்கப்பட வேண்டியதுடன் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது கிராம அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் பதவியின் அடிப்படையில் அதன் செயலாளர் ஆவார். மாவட்டச் செயலாளர் பதவி நிலையில் அதற்கு தலைமை தாங்க வேண்டும்.

கிராம அபி விருத்தி மாகாண அதிகார சபையை ஸ்தாபித்தலும் அதன் பொறுப்பும்.

8. (1) ஒவ்வொரு மாவட்ட அதிகார சபையின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள் உள்ளிட்ட பின்வருவோரின் அங்கத்துவத்தில் மாகாண அதிகார சபை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

(அ) மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் ;

(ஆ) மாகாண உதவி கிராம அபிவிருத்திப் பணிப்பாளர்கள் ;

(இ) மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ;

(ஈ) மாவட்ட அதிகார சபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள்

(உ) மூன்று மாவட்டங்களினதும் அதிகாரசபைகளின் அங்கத்துவர்களில் இருந்து 3 மாவட்டங்களும் அங்கத்துவம் பெறும் பொருட்டு உரிய விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூன்று பேர்.

(2) மாகாண அதிகார சபையின் நோக்கம் :

(அ) தேசிய கொள்கைக்கு இணங்க மாகாண கிராம அபிவிருத்தி கொள்கையினை தயாரித்தல் ;

(ஆ) அந்த மாகாண கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் ;

(இ) மாகாண கிராம அபிவிருத்தி நியத்தினை நிர்வகித்தல் ;

(ஈ) மாகாண கிராம அபிவிருத்திக்கு அவசியமான விஷேட செயற்திட்டங்களை இனங்காணுதல், திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ;

(உ) மாகாண கிராம அபிவிருத்தி பயிற்சி நடவடிக்கை, ஆராய்ச்சி நடவடிக்கையை மேற்கொள்ளல்.

(3) இக்கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபையின் நன்மைக்காக இந்நியதிச் சட்டத்தின் V ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்கியபடி மாகாண சபையின் கிராம அபிவிருத்தி பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட யாப்பு ஒன்று இருக்க வேண்டியதுடன், அந்த யாப்பானது மாகாண அதிகார சபையை ஸ்தாபிக்கும் போது பெரும்பான்மையோரினால்

ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். கிராம அபிவிருத்திப் பணிப்பாளரினால் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள யாப்பில் ஏதாவது மாற்றம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அங்கத்தவர்களின் 3/4 பங்கினர் பங்குபற்றும் கூட்டத்திற்கு வருகை தந்த எண்ணிக்கையில் 2/3 அளவிலான வாக்கின் அடிப்படையில் யாப்பு திருத்தப்பட வேண்டும். அந்த திருத்தப்பட்ட யாப்பு மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற தினத்தில் இருந்து நடைமுறைக்கு வர வேண்டும்.

(4) மாகாண அதிகார சபையின் தவிசாளர் கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபையின் தவிசாளர்களில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும். மாகாண அதிகார சபையின் செயலாளர் உதவி கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் ஆவார். மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் தலைமை தாங்க வேண்டும். மாகாண அதகார சபையின் கோரமானது 6 ஆகும். ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு முறை மாகாண அதிகார சபை கூட வேண்டும்.

## பகுதி V

*மாகாண கிராம அபிவிருத்தி நிதியம் மற்றும் கணக்கினை ஸ்தாபித்தல்.*

9. (1) இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை வழங்குவது மற்றும் தேவையான செலவுகளை மேற்கொள்வதற்காக இதனகத்துப் பின் கிராம அபிவிருத்தி நிதியம் என அழைக்கப்படும் மாகாண கிராம அபிவிருத்தி நிதியம் ஒன்று இங்கு ஸ்தாபிக்கப்படுகின்றது. அந்த நிதியத்தின் கீழ் மாகாண கிராம அபிவிருத்திக் கணக்கொன்றை ஆரம்பித்து நடாத்திச் செல்ல வேண்டும்.

(2) இந் நிதியத்திற்கு பின்வரும் வழிகளில் கிடைக்கப்படும் நிதி பணமனுப்பல் செய்யப்பட வேண்டும்.

(அ) அரசிடமிருந்து கிடைக்கப்படும் ஏற்பாடு ;

(ஆ) மாகாண சபை நிதியத்தில் மேற்கொள்ளப்படும் மானியங்கள் ;

(இ) ஒப்பந்தச் சேவைகளில் இருந்து கிடைக்கப்படும் பலாபலன்களில் 1/5 பங்கு ;

(ஈ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நபர்களிடமிருந்து அல்லது ஸ்தாபனங்களின் மூலம் (நன்கொடை அல்லது உதவி) ஆகக் கிடைக்கப்பெறும் நிதி ;

(உ) வேறு சட்டரீதியான மார்க்கங்களில் கிடைக்கப்பெறும் வருமானம்.

(3) பின்வரும் செலவுகள் மாகாண அதிகார சபையின் சிபார்சின் கீழ் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் கிராம அபிவிருத்தி நிதியத்தில் மேற்கொள்ள இயலும்.

(அ) கிராம அபிவிருத்திச் சங்கம்/மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம், பிரதேச கிராம அபிவிருத்தி அதிகார சபை, கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபைகளின் சிபார்சின் கீழ் நிதியினை முதலீடு செய்தல் ;

(ஆ) மாகாண கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், தொழிற் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் ;

(இ) கிராம அபிவிருத்தி சங்கங்கள்/மகளிர் அபிவிருத்திச் சங்கங்களின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ;

(ஈ) கிராம அபிவிருத்திப் பிரதேச/மாவட்ட /மாகாண அதிகார சபைகளுக்குரிய நிர்வாகச் செலவு;

(உ) கிராம அபிவிருத்தி நடவடிக்கையை மேம்படுத்துவதற்காக ஒத்துழைப்பு நல்கும் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் ஆன்மீக அபிவிருத்திக்கு உரியதான செலவுகள்.

(4) கிராம அபிவிருத்தி நிதியத்தின் நிதியாண்டானது பஞ்சாங்க வருடமாக வேண்டும். கிராம அபிவிருத்தி நிதியம் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகிய அரச வங்கிகளில் மட்டும் பேணப்பட வேண்டும்.

(5) நிதியத்தில் உடனடியாக தேவைப்படாத நிதி 9 (4) இல் காட்டப்படும் அரச வங்கியொன்றில் அல்லது அவற்றின் அரச நிதியமாக முதலீடு செய்ய இயலும்.

(6) நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் நடவடிக்கை ஒழுங்குவிதிகள் மூலம் நியமப்படுத்தப்பட வேண்டும்.

(7) கணக்கு விசாரணை தொடர்பாக அரசியல் அமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் கீழ் கணக்காய்வாளர் நாயகத்துக்கு காணப்படும் அதிகாரங்கள் அதிகாரப்படுத்தப்பட வேண்டும். கணக்காய்வு தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் உரிய மாற்றங்களுடன் உரியதாக வேண்டும்.

(8) (7) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பஞ்சாங்க வருடம் ஒன்று தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அவ்விடயங்களுக்கு உரிய தெளிவுபடுத்தல்கள் மற்றும் நிர்வாகம் தொடர்பான பணிப்பாளரின் அறிக்கை ஒன்று கீழே காணப்படும் ஆவணங்களுடன் அமைச்சின் செயலாளரின் மூலம் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, ஐந்தொகை மற்றும் வருமான செலவுக் கணக்கு.

(9) 9 (8) உப பிரிவின் கீழ் தமக்கு அனுப்பப்பட்ட அறிக்கை மற்றும் ஆவணங்களின் பிரதி அமைச்சரினால் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பகுதி VI

கிராம அபிவிருத்திச் சங்கத்தை கலைத்தல்.

10. (1) உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றின் நிதியில் முறைகேடான பயன்பாடு, ஊழல், மோசடி, இலஞ்சம் என்பன நிகழ்ந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ள வேளையில் உரிய உத்தியோகத்தர்களின் மூலம் ஆரம்ப அறிக்கை ஒன்றினை பெற்றுக்கொண்ட பின்னர் அவ்வாறு முறைகேடு, இலஞ்ச ஊழல் நிகழ்ந்துள்ளது என்பதற்கு போதுமான காரணங்கள் காணப்படுமிடத்து அல்லது 6 மாத காலத்தினுள் சங்கமானது செயலிழந்து காணப்படுமிடத்து கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் மூலம் அந்த கிராம அபிவிருத்திச் சங்கத்தின் எல்லா விடயங்களையும் இடைநிறுத்தி விசேட பொதுச் சபை ஒன்றினைக் கூட்டி புதிய உத்தியோகத்தர் குழாம் ஒன்றினை தெரிவு செய்ய கிராம அபிவிருத்திப் பணிப்பாளருக்கு/பிரதேச செயலாளருக்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள இயலும். மேலும், நிதியினை முறைகேடாக பயன்படுத்தியமை, மோசடி, இலஞ்ச ஊழல் தொடர்பான சந்தர்ப்பத்தில் தற்காலத்தில் நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக தொடர்ந்தும் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு கிராம அபிவிருத்திப் பணிப்பாளருக்கு/ பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

(2) யாப்பு ரீதியாக நியமிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி ப் பிரதேச அதிகார சபை மற்றும் மாவட்ட அதிகார சபை ஒன்றின் நிதியில் முறைகேடான பயன்பாடு, மோசடி, இலஞ்ச ஊழல் நிகழ்ந்துள்ளது என அறிவிக்கப்பட்ட வேளையில் கிராம அபிவிருத்திப் பணிப்பாளரினால் விசேடமாக அதிகாரம் அழிக்கப்பட்ட உத்தியுயோகத்தரின் மூலம் ஆரம்ப அறிக்கை ஒன்றினை பெற்றுக்கொண்ட பின்னர் அவ்வாறு மோசடி, இலஞ்ச ஊழல் நிகழ்ந்துள்ளது என அறிவதற்கு போதுமான அளவு விடயங்கள் காணப்படுமிடத்து அல்லது 6 மாத காலமாக அதிகார சபை செயலிழந்து காணப்படுகின்றது என்பதற்கு போதுமான அளவு காரணங்கள் இருக்குமிடத்து அந்த அதிகார சபையை கலைப்பதற்கு பணிப்பாளருக்கு அதிகாரம் உண்டு.

(3) கலைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபைக்கு அல்லது கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபைக்கு உரிய எல்லா அசையும் அசையா சொத்துக்கள் கணக்கு ஆவணங்கள், அங்கத்துவப் பெயர்ப் பட்டியல் உபயோகத்தில் உள்ள எல்லா கோப்புக்களும் கிராம அபிவிருத்திப் பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்படும். கிராம அபிவிருத்திப் பணிப்பாளரினால் பெயர் குறிப்பிடப்படும் உத்தியோகத்தருக்கு அந்த சொத்துக்களை ஒப்படைத்து அதில் இருந்து விடுபடும் வரை கலைக்கப்பட்ட அந்த அதிகார சபை தமது பொறுப்புக்களில் இருந்து விடுபட முடியாது.

(4) நிதியை முறைகேடாக உபயோகித்தது, இலஞ்ச ஊழல் தொடர்பாக 10 (1) இன் கீழ் கலைக்கப்பட்டுள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்தின், பிரதேச அதிகார சபை அல்லது மாகாண அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு எதிராக தற்காலத்தில் நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு கிராம அபிவிருத்திப் பணிப்பாளருக்கு அதிகாரம் உண்டு.

(5) யாப்பு ரீதியாக நியமிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபையின் நிதியின் முறைகேடான பயன்பாடு, மோசடி, இலஞ்ச ஊழல் நிகழ்ந்துள்ளது என அறிவிக்கப்பட்ட வேளையில் கிராம அபிவிருத்திப் பணிப்பாளரினால் அல்லது செயலாளரினால் விசேடமாக அதிகாரம் அழிக்கப்பட்ட உத்தியோகத்தரின் மூலம் ஆரம்ப அறிக்கை ஒன்றினை பெற்றுக்கொண்ட பின்னர் அவ்வாறு நிதி மோசடி, இலஞ்ச ஊழல் நிகழ்ந்துள்ளது என்பதற்குத் திருப்திப்படக்கூடிய அளவில் விடையங்கள் காணப்படுமிடத்து அல்லது 6 மாத காலமாக அவ் அதிகார சபை செயல் இழந்து காணப்படுகின்றது என்பதற்கு போதுமான அளவு காரணங்கள் இருக்குமிடத்து அந்த அதிகார சபையை கலைப்பதற்கு செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

(6) 10 (5) பிரிவின் கீழ் கலைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபைக்கு உரிய எல்லா அசையும் அசையா சொத்துக்கள் கணக்கு ஆவணங்கள், அங்கத்துவப் பெயர்ப்பட்டியல் உபயோகத்தில் உள்ள எல்லா கோப்புக்களும் அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்படும். அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் உத்தியோகத்தருக்கு அந்த சொத்துக்களை ஒப்படைத்து அதில் இருந்து விடுபடும் வரை கலைக்கப்பட்ட உத்தியோகத்தர் குழாம் தமது பொறுப்புக்களில் இருந்து விடுபட முடியாது.

*(7) 8 (1) உப பிரிவின் கீழ் சட்டரீதியாக நியமிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபையின் நிதியின் முறைகேடான பாவனை அல்லது இலஞ்ச ஊழல் நிகழ்ந்துள்ள வேளைகளில் கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் அல்லது செயலாளரினால் விசேடமாக அதிகாரம் ஒப்படைக்கப்படும் உத்தியோகத்தர் மூலம் ஆரம்ப அறிக்கை ஒன்றை பெற்றுக்கொண்ட பின்னர் அந்த மாகாண அதிகார சபைகள் கிராம அபிவிருத்திப் பணிப்பாளரினால் கலைக்கப்பட்டுள்ள வேளையில் அந் நிதியின் முறைகேடான பயன்பாடு அல்லது ஊழல் மோசடி தொடர்பாக தற்காலத்தில் நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க செயலாளருக்கு அதிகாரம் உண்டு.*

*11. (1) பணிக்கப்பட வேண்டும் என இந்நியதிச் சட்டத்தின் 11 (2) ஆவது பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பாக அமைச்சரினால் விதிகளை ஆக்கிக் கொள்ளலாம்.*

*(2) மேலே உப பிரிவில் ஒப்படைக்கப்படும் அதிகாரங்களின் கீழ் கீழே காட்டப்படும் விடயங்களுக்கு விதிகளை ஆக்கிக் கொள்ள இயலும்.* *விதிகள்.*

*(அ) கிராம அபிவிருத்திச் சங்கம்/மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தைப் பதிவு செய்வதற்காக கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகள், நிபந்தனைகள், மாதிரிப்படிவங்கள் ;*

*(ஆ) பதிவுக்காக விண்ணப்பிக்கும் சங்கத்தின் குறைந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை ;*

*(இ) கிராம அபிவிருத்திச் சங்கம்/மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக அமைக்கப்படும் சிறிய குழுப் பிரிவினூடாக அங்கத்துவப்பணம், சேமிப்பைச் செலுத்தலும் கடன் வழங்குதலும்;*

*(ஈ) பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாவட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் மாகாண கிராம அபிவிருத்தி அதிகார சபைகளின் நடைமுறை ஒழுங்குவிதிகளை நியமப்படுத்தல் ;*

*(உ) கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றின்/மகளிர் கிராம அபிவிவிருத்திச் சங்கம் ஒன்றின்/பிரதேச கிராம அபிவிருத்தி அதிகார சபைகளில்/மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகார சபைகள், மாகாண கிராம அபிவிருத்தி அதிகார சபைகளுக்கு உரிய மாதிரி யாப்பு தொடர்பாக;*

*(ஊ) கிராம அபிவிருத்திச் சங்க நிதியத்தின் கணக்காய்வு செய்தல் தொடர்பாக ;*

*(எ) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவு செய்து கொள்வதற்காகவும், கொள்கைக்கு உட்படும் அனைத்துச் செயற்பாடுகள் தொடர்பாகவும்.*

*(3) அமைச்சரின் மூலம் தயாரிக்கப்படும் அனைத்து விதிகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். இவ்வாறு பிரசுரிக்கப்படும் தினத்திலோ அல்லது விதிகளில் குறிப்பிடப்படும் தினத்துக்கு பிற்பட்ட தினத்தில் அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.*

*(4) அமைச்சரினால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு விதியும், அவ்விதி வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பின் இயன்ற விரைவில் மாகாண சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வொரு விதியும் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட தினத்தில் இருந்து, அதன் கீழ் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது ஒன்றுக்கு பாதிப்பு ஒன்று ஏற்படாதபடி ஒழிக்கப்பட்டதாகக் கருத வேண்டும்.*

*12.இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்படும் விதிகள், கட்டளைகள் மற்றும் ஏற்பாடுகளின் கீழ் தமது தற்றுணிப்பிற்கு இணங்க கிராம அபிவிருத்திப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படும் ஏதாவது கட்டளை ஒன்று அல்லது முடிவு ஒன்று தொடர்பாக அம்முடிவு வழங்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு மாதத்தினுள் மேன்முறையீடு ஒன்றை செய்யும் சந்தர்ப்பத்தில் அல்லது அம்முடிவு அல்லது தீர்மானம் சிறந்ததல்ல என செயலாளருக்கு விளங்கும் சந்தர்ப்பத்தில் அம்முடிவை இல்லாதொழிப்பது அல்லது மாற்றம் செய்வது அமைச்சின் செயலாளர் தற்றுணிப்புக்கு உரியதாகும்.*

*13.1998 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கிராம அபிவிருத்தி நியதிச் சட்டம் இங்கு இல்லாதொழிக்கப்பட்ட போதும் அந் நியதிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் விடயங்களாக கருதப்பட வேண்டும். அவ்வாறே அந்த நியதிச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கிராம அபிவிருத்தித் திணைக்களம் இந் நியதிச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்படும் கிராம அபிவிருத்தித் திணைக்களமாக கருதப்பட வேண்டும்.*

*14. இந் நியதிச் சட்டத்தில் பதங்கள் தொடர்பாக பொருள்கொள்ளல் தேவைப்படுமிடத்து–* *பொருள் கொள்ளல்.*

"அமைச்சர்" எனக் குறிப்பிடப்படுவது, மேல் மாகாண சபையின் கிராம அபிவிருத்தி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ஆவார்.

"அமைச்சரின் செயலாளர்" எனக் குறிப்பிடப்படுவது, மேல் மாகாண சபையின் கிராம அபிவிருத்தி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளராகும்.

"பணிப்பாளர்" என்பது, தற்காலத்தின் மேல் மாகாண சபையின் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் அல்லது அவருக்காக ஒழுங்காகப் பதில் கடமையாற்ற நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் என்ற கருத்தாகும்.

"உதவிப் பணிப்பாளர்" என்பது, கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு ஒத்துழைப்பு நல்குவதற்காகவும், அந்நடவடிக்கையினை ஒழுங்காக மேற்கொண்டு செல்வதற்காக நியமிக்கப்படும் உத்தியோகத்தர் என்ற கருத்தாகும்.

"சொத்து" என்பதால் கருதப்படுவது, கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை, மாவட்ட அதிகார சபையும், மாகாண அதிகார சபைக்குரிய புத்தகங்கள், காகிதாதிகள், கையில் உள்ள நிதி, வங்கி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களில் உள்ள நிதி மரப்பொருட்கள், வாகனங்கள், உபகரணங்கள், கட்டடங்கள், காணி போன்ற அனைத்துச் சொத்துக்களுமாகும்.

"கிராமம்" எனக் குறிப்பிடுவது, கிராம சேவையாளர் பகுதி அல்லது சம்பிரதாயமாக பொதுவான பிரிப்புகளுடன், கிராமம் அல்லது கட்டடம் அல்லது தோட்டப் பிரிவுடன் கிராமம் அல்லது மக்கள் தொகை அல்லது நகர அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள தோட்டங்கள் ஆகும்.

"கிராம அபிவிருத்திச் சங்கம்" எனக் குறிப்பிடப்படுவது, கிராமத்தில் பதிவு செய்துள்ள ஆண், பெண் இருபாலாரும் பங்கு பற்றும் வகையில் அமைக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகும்.

"மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம்" எனக் குறிப்பிடப்படுவது, கிராமத்தில் வசிக்கும் மகளிரின் பங்குபற்றுதலுடன் அமைக்கப்பட்ட மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கமாகும்.

15. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ் அத்துடன் ஆங்கில பதங்களுக்கிடையே தெளிவின்மை ஏற்படுமிடத்து சிங்கள பதமே அதிகாரமுடையதாகும்.

## முதலாவது அட்டவணை

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மாதிரி யாப்பு

1. பெயர் :----.
2. முகவரி :----.
3. அதிகாரப் பிரதேசம் :-
4. நோக்கம் :----.

I. சங்கத்தின் அதிகாரப் பிரதேச மக்களின் பொருளாதார, சமூக, சுகாதார, கல்வி, நாகரீக மற்றும் கலாசார மேம்பாட்டுக்காக செயற்படல் ;

II. அரசு அத்துடன் அரச சார்பற்ற தாபனத்தின் மூலம் வழங்கும் சேவைகள் மற்றும் வளங்களைப் பயன்படுத்தி, சுய சக்தியின் அடிப்படையின் கீழ் ஒருங்கிணைந்த முயற்சியின் ஊடாக கிராம மக்களின் பொருளாதார, சுகாதார அத்துடன் சமூக அபிவிருத்தியினை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்;

III. கிராம அபிவிருத்தி திட்டத்தினைத் தயாரிக்கத் தேவையான தகவல்களைச் சேகரித்தல், வளங்களை இனங்காணுவதன் மூலம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் மக்களை அறிவுறுத்துவதன் ஊடாக நபர், குடும்பம் மற்றும் அதிகாரப் பிரதேசத்தின் எல்லா சமூகத்தினையும் உயர்த்த நடவடிக்கை எடுத்தல் ;

IV. பிரதேச மக்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பினை எல்லாப் பகுதியினருக்கும் வழங்கி செயற்படுத்தல் ;

V. சமாதானமாக சக வாழ்வுக்குத் தேவையான ஒழுக்கம் சீரழியாமல் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.

5. பொறுப்புக்களும் கடமைகளும் :-

I. பொது வசதிகள் மற்றும் பிற சேவைகளை வழங்குதல், அரச விஸ்தரிப்புச் சேவையை கிராமத்திற்குப் பெற்றுக் கொடுத்தல் ;

II. சுற்றாடலைப் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும் ;

III. அரச சொத்துக்களைப் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தற்கு ஒத்திழைப்பினை வழங்குதலும் ;

IV. சமூக, கலாசார மற்றும் பொருளாதார புள்ளி விவரங்களைச் சேகரித்து கிராம திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ;

V. பிரதேச செயலாளர் காரியாலயம், மாகாண சபை, உள்ளூராட்சி தாபனங்கள், சங்கங்களின் அதிகாரப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு அரசுக்கு பிரேரணைகளை முன்வைத்தல் மற்றும் கிராம மக்களின் உபயோகத்திற்காக "மக்கள் பயன்பாட்டு" வேலைகளை நிறைவேற்றல் ;

VI. சங்க அங்கத்தவர்களின் பொருளாதார பலாபலனை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் தொழில் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல் ;

VII. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிக்கும் போது உரிய பிரிவுகளின் அரச அல்லது கூட்டுத்தாபன அல்லது சபைகளின் உத்தியோகத்தர்களை அழைத்தல் மற்றும் இணைப்புச் செயற்பாட்டை மேற்கொள்ளல்.

6. அதிகாரங்கள் :-

மேலே கூறப்பட்ட நோக்கம் மற்றும் பொறுப்புக்களை நடைமுறையில் இடுவதற்காக அரச மற்றும் அரச மற்றும் அரச சார்பற்ற தாபனங்கள் மற்றும் இயக்கங்களுடன் ஒன்றிணைந்து திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்த அத்துடன் அதிகாரப் பிரதேசத்தின் பொது அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பாக பரிசோதித்து செயற்பட சங்கத்திற்கு அதிகாரம் உண்டு.

7. அங்கத்துவம் :-

(அ) அங்கத்துவம் கிடைக்கப்பெற உள்ள தகைமைகள் !

(i) இலங்கை பிரஜை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) 18 வயதைவிடக் கூடிய அதிகாரப் பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்க வேண்டும் ;

(iii) வேறு கிராம அபிவிருத்தி சங்கமொன்றின்/மகளிர் சங்கமொன்றின் அங்கத்தவர் ஒருவராக இல்லாதிருத்தல் .

(ஆ) அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்ளல் :

(i) ஆரம்பக் கூட்டத்திற்கு வருகை தந்த அதே போல் ஆரம்ப கூட்டத்திற்கு வருகை தராத எனினும் அங்கத்துவத்தினைப் பெறத் தகுதி உடையவர்களினால் சங்கத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட படிவத்தினை உரிய முறையில் நிரப்பி சங்கத்தின் செயற்குழு அங்கத்தவர் ஒருவருக்கு சமர்ப்பிக்க வேண்டும் ;

(ii) விண்ணப்பப்படிவத்தினை ஆராய்ந்து பார்த்து பொதுச் சபைக் கூட்டத்தில் வழிமொழிவதன் கீழ் செயற்குழுவினால் அங்கத்தவர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டும்.

(இ) அங்கத்துவம் இரத்தாகுதல் :

(i) மரணமடைதல் ;

(ii) சங்கத்தின் அதிகாரப் பிரதேசத்தில் வசிப்பதை கைவிட்டுச் செல்லல் ;

(iii) சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களில் செயற்பாட்டு ரீதியில் பங்குபற்றாததினால் அல்லது பொதுச் சபை அல்லது செயற்குழுக் கூட்டங்கள் 3 க்கு அறிவிக்காமல் தொடர்ந்து கலந்து கொள்ளாததினால் பொதுச் சபையின் கூடிய அளவான எண்ணிக்கையினரின் விருப்பத்திற்கு இணங்க அங்கத்துவத்தினை இரத்துச் செய்ய முடியும்.

(iv அங்கத்துவத்தில் இருந்து கேட்டு விலகிக் கொள்ளுதல் ;

(v) சங்கத்தின் நோக்கத்திற்கு முரணாகச் செயற்பட்டதாக நிருபிக்கப்பட்டு பெரும்பான்மை எண்ணிக்கையினரான அங்கத்தவர்களின் விருப்பத்திற்கு இணங்க அங்கத்துவத்தினை இல்லாதொழிக்க இயலும்.

(ஈ) செயற்குழுவின் அங்கத்துவம் இல்லாமல் போதல் :

செயற்குழுக் கூட்டத்திற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நீதியான காரணம் ஒன்று இல்லாது தொடர்ந்து இரண்டு முறை பங்குபற்றுவது தவணை தவறினால் அங்கத்துவம் இரத்தாகும். அங்கத்துவம் இரத்தாகிய போது அவர் ஏதாவது பதவி ஒன்றை வகித்தால் அதுவும் இரத்தாகும். அவ்வாறு பதவி இரத்தாகியதாக தவிசாளர் அல்லது செயலாளர் நடைமுறைச் செயற்குழுவிற்கு அறிவிக்க வேண்டும். அவ்வேளையில் அவர்கள் இல்லாதவிடத்து பிரதித் தலைவருக்கு அல்லது பிரதிச் செயலாளருக்கு அதை மேற்கொள்ள இயலும். இரண்டு வாரத்தினுள் சங்கம் அவ் வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. பொதுச் சபைக் கூட்டமும் செயற்குழுக் கூட்டமும் :-

(i) பொதுச் சபைக் கூட்டம் :
ஆகக் குறைந்தது 4 மாதத்திற்கு ஒரு முறை பொதுச் சபைக் கூட்டம் நடைபெற வேண்டும். கூட்ட தினத்திற்கு 7 நாட்களுக்கு முன் கிராமத்தின் பகிரங்க இடங்களில் ஒட்டும் அறிவிப்பின் மூலம் கூட்டத்திற்கு வருகை தருமாறு அறிவிக்க வேண்டும்;

(ii) வருடாந்த பொதுக் கூட்டம் :

புதிய உத்தியோகத்தர் குழாமினைத் தெரிவு செய்யவும் அத்துடன் முன்னேற்ற மதிப்பீட்டினை மதிப்பிடவும், எதிர்வரும் வருடத்திற்காக திட்டத்தினைத் தயாரிக்கவும் எல்லா அங்கத்தவர்களையும் கொண்டதாக வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற வேண்டும். இக்கூட்டத்திற்கு பிரதேச செயலாளருக்கு, மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அத்துடன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு மற்றும் பிரதேச கிராம உத்தியோகத்தருக்கு அழைப்பு விடுக்க வேண்டும்.

(iii) செயற்குழுக் கூட்டம் :

ஆரம்பக் கூட்டத்தில் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்ட பின் 1 மாதத்திற்கு ஒரு முறையாவது செயற்குழு கூட வேண்டும். கூட்டம் நடைபெறும் தினத்தினை அறிவிப்பது தனிப்பட்ட அறிவித்தல் மூலம் செயலாளரினால் கூட்டத்திற்கு 4 நாட்களுக்கு முன் மேற்கொள்ளப்பட வேண்டும் ;

(iv) உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் கூட்டம் :

வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் பெரும்பான்மையோரினது விருப்பத்தின் அடிப்படையில் உத்தியோகத்தர் குழாம் தெரிவு செய்யப்பட வேண்டும். உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வகாலம் 2 வருட காலம் ஆகும். வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு முன்னர் ஏதாவது பதவி ஒன்று வெற்றிடம் ஆகினால் வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு முன்னர் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அப்பதவி நிரப்பப்பட வேண்டும்.

(v) விசேட பொதுச் சபைக் கூட்டம் :

செயற்குழுவின் தீர்மானத்தின் கீழ் அல்லது அங்கத்தவர்களின் 25% க்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களின் எழுத்து மூலமான வேண்டுகோளின் கீழ் அல்லது பிரதேச செயாளர், கிராம அபிவிருத்தி மாவட்ட உத்தியோகத்தர்/கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் எழுத்துமூலமான அறிவிப்பொன்றின் கீழ் செயலாளரினால் 7 நாட்களுக்கு முன் விசேட பொதுச் சபை கூட்டப்பட வேண்டும்.

(vi) விசேட செயற்குழுக் கூட்டம் :

செயற்குழு அங்கத்தவர்களின் 1/3 பங்கினரின் எழுத்து மூலமான வேண்டுகோளின்படி அல்லது பிரதேச செயலளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் எழுத்துமூலமான அறிவிப்பொன்றின் கீழ் ஆகக் குறைந்தது 5 நாட்கள் காலம் வழங்கி விசேட செயற்குழுக் கூட்டம் செயலாளரினால் கூட்டப்பட வேண்டும்.

9. நிறைவெண் :-

(i) பொதுச் சபை/விசேட பொதுச் சபை மற்றும் வருடாந்த பொதுச் சபைக் கூட்டங்களின் நிறைவு எண் அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் 1/3 பங்கினராக வேண்டும்.

(ii) செயற்குழுக்கள் அத்துடன் விசேட செயற்குழுக் கூட்டங்களுக்கான நிறைவு எண் அவ் அங்கத்தவர்கள் கலந்து கொள்ளும் எண்ணிக்கையில் 1/2 பங்கினரை விட அதிகமாக வேண்டும்.

10. உத்தியோகத்தர்கள் :-

1. பிரதான உத்தியோகத்தர்களை நியமித்தல்.

ஆரம்பக் கூட்டத்திற்காக வருகை தந்திருக்கும் நபர்களுள் பின்வரும் பிரதான உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

1. தவிசாளர்
2. செயலாளர்
3. பொருளாளர்
4. பிரதி பொருளாளர்
5. பிரதிச் செயலாளர்

2. செயற்குழு அங்கத்தவர்கள்:

அதிகாரப் பிரதேசத்தின் எல்லா கிராம கட்டடங்கள் அல்லது பல்வேறுபட்ட இனங்கள் அங்கத்துவம் பெறும் பொருட்டு செயற்குழு அங்கத்தவர்களை தேவையான அளவு நியமிக்க முடியும்.

3. ஆலோசனையாளர் :

சங்கத்தின் தற்றுணிப்புக்கு இணங்க உரியவர்கள் அதற்காக நியமிக்கப்பட இயலும்.

4. நிபுணர் :

பிரதேசத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி நிலையில் நிபுணர் ஆவார். சங்கத்தின் புத்தகங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளைப் பரிசோதித்துப் பார்க்க அவருக்கு அதிகாரம் உண்டு.

11. உத்தியோகத்தர்களின் பொறுப்புக்களும் கடமைகளும் :-

1. தவிசாளர் :

* செயற்குழு/பொதுச் சபை/விசேட பொதுச் சபை/வருடாந்த பொதுச் சபையினை வழிநடத்துதல்.

2. செயலாளர் :

* எல்லாக் கூட்டங்களையும் கூட்ட நடவடிக்கை எடுத்தல்.
* சங்கத்துக்கு உரிய புத்தகங்கள் ஆவணங்களைச் சரியாக ஒழுங்காகப் பேணிச் செல்லுதல், சங்கத்திற்காக கடிதப் பரிமாற்றங்களில் ஈடுபடல்.
* செயற்குழு மற்றும் பொதுச் சபையின் முடிவுகளை உரிய உத்தியோகத்தர்களுக்கும், தாபனங்களுக்கும் அறிவித்தல் அத்துடன் கிடைக்கும் கடிதங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல்.

3. பொருளாளர் :

* சங்கத்துக்கு உரிய நிதி தொடர்பாகவும், பாதுகாப்பு, கொடுக்கல், வாங்கல் தொடர்பான பொறுப்புக்கள் பொருளாளருக்கு உரியதாகும்.
* கணக்குக்கு உரிய புத்தகங்களை ஒழுங்காகப் பேணிச் செல்லுதல்.
* நிதி அறிக்கைகளை உரிய காலத்தில் உரிய தாபனங்களுக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் அறிக்கையினைச் சமர்ப்பித்தல்.
* சங்கத்துக்கு உரிய நிதி நிலைமை மற்றும் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்து செயற்குழுவில் அதேபோல் தேவையான வேளையில் பொதுச் சபையில் அங்கீகரித்து கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மற்றும் உரிய தாபனங்களுக்கு சமர்ப்பித்தல், பொருளாளர் இராஜினாமா செய்தால் அவரிடம் காணப்படும் மற்றும் புத்தகங்கள் பிரதேச செயலாளரினால் பெயர் குறிப்பிடும் ஒருவருக்கு ஒப்படைக்க வேண்டும்.
* சங்கத்தின் கணக்குப் பரிசோதகர் கேட்கும் ஆவணங்களை கணக்குப் பரிசோதகருக்கு சமர்ப்பிப்பது அத்துடன் கணக்குப் பரிசோதகர் தமது விடயங்களை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்குதல்.

4. பிரதித் தலைவர் :

* தலைவர் இல்லாத வேளையில் அவருக்காகச் செயற்படல்.

5. பிரதிச் செயலாளர் :

* செயலாளருக்கு ஒத்துழைப்பு நல்குதல் அத்துடன் அவர் இல்லாத சந்தர்ப்பங்களில் அவருக்குப் பதிலாகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.

6. கணக்குப் பரிசோதகர் :

* கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிதி மற்றும் புத்தகங்கள் மற்றும் பொருட்கள் தொடர்பாக பரிசோதித்துப் பார்ப்பதற்கும் மற்றும் பொதுச் சபைக்குத் தேவையான சந்தர்ப்பத்திலும் வருடத்திற்கு ஒருமுறை கணக்கு தொடர்பாக அறிவிக்கவும் கணக்குப் பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அவர் உத்தியோகத்தர் குழாமில் அடங்காத சுதந்திரமான நபர் ஒருவராக வேண்டும். யாப்பு ரீதியாக சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செலவு தொடர்பாகப் பரிசோதித்துப் பார்த்து சங்கத்தின் நிதிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக தமது சான்றிதழையும் அவதானிப்பிணையும் சமர்ப்பிக்க வேண்டும்.

* 50,000 ரூபா அல்லது அதைவிடக்கூடிய நிதி தொடர்பாகச் செயற்படும் கிராம அபிவிருத்தி சங்கத்திற்காக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அல்லது வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்குப் பரிசோதகரின் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம். அதற்கு உரிய ஊதியம் ஒன்று செலுத்தவேண்டி ஏற்படின் அதைச் செலுத்தலாம்.

12. பொறுப்புச் சபை :-

* சங்கத்துக்கு உரிய அசையும் மற்றும் அசையா சொத்து போன்றவை தொடர்பான பொறுப்பினை வகிக்கவும் அத்துடன் அவற்றை நிர்வகிப்பதற்காகவும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் உள்ளடங்குமாறு பொறுப்புச் சபை ஒன்று நியமிக்கப்பட வேண்டும். பொறுப்புச் சபையானது பதவியில் அதேபோல் பெயரில் பொதுச் சபையினால் நியமிக்கப்பட வேண்டும்.

* பொதுச் சபையின் ஏதாவது நடவடிக்கை ஒன்று அல்லது செயற்பாடு ஒன்று சபையின் அங்கத்துவத்தில் ஏற்பட்ட ஏதாவது வெற்றிடம் ஒன்று காரணமாக அதிகாரமற்றதாகக் கூடாது.

* சம்பளம் படிக்கு சமமான ஏதாவது ஊதியம் ஒன்று கிடைக்கப்பெற சங்க உத்தியோகத்தர்களாகப் பொறுப்புச் சபையினருக்கு உரிமை இருக்கக் கூடாது. எனினும், ஏதாவது காரியம் ஒன்றை நிறைவேற்ற அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவை சபையில் நிறைவேற்றப்பட்ட பின் சபை நிதியத்தில் இருந்து பெற முடியும்.

13. நிதியம் :-

* அங்கத்துவ நிதி :

  I. ஒரு மாதத்திற்கு..................... (பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்படும் நிதிக்கு) மேற்படாத நிதி ஒன்று அங்கத்தவர் ஒருவரிடம் இருந்து அங்கத்துவப் பணமாக அறவிடப்பட வேண்டும்.

14. விசேட நிதியம் :-

விசேட கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய அரசிடமிருந்து அல்லது மாகாண சபையிடமிருந்து அல்லது வேறு தாபனங்களிலிருந்து கிடைக்கும் விசேட நிதிக் கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டும். அந் நிதியினை மீண்டும் பெற்றுக்கொள்ளும் போது பிரதேச செயலாளர் அல்லது கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அரசு சார்பாக கையொப்பம் இடவேண்டியதுடன், சங்கத்திற்காக பொருளாளர் அத்துடன் செயலாளர் அல்லது தவிசாளர் யையொப்பம் இட வேண்டும்.

விசேட சந்தர்ப்பத்தில் ஏதாவது நிதி ஒன்றை சேகரிக்க வேண்டிய தேவை ஏற்படின் பிரதேச செயலாளரிடம் இருந்து அதற்கு அங்கீகாரம் பெற வேண்டும். அந்நிதி செலவு செய்யப்பட்டது தொடர்பாக அறிக்கை ஒன்று நிதி செலவு செய்யப்பட்டவுடன் பொதுச் சபையின் அனுமதியுடன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். இந்த அறிக்கையினை சமர்ப்பிக்கும் எல்லை 3 மாதங்களைத் தாண்டக்கூடாது.

15. சங்கத்தின் நிதியம் :

அங்கத்தவர்களிடம் இருந்து சேகரிக்கப்படும் அங்கத்துவப் பணம், அத்துடன் அன்பளிப்புக்கள் அத்துடன் வேறு நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து உழைக்கும் நிதி போன்ற சங்கத்தின் திரட்டிய நிதியத்திற்கு சேகரிக்கப்படும். அந்நிதியில் பொதுச் சபை அங்கீகரிக்கும் 2,000 ரூபா நிதி பொருளாளருக்கு வைத்திருக்க முடிவதுடன் மிகுதி அரச வங்கியில் வைப்பில் இடவேண்டும். அந்நிதியினை மீளப்பெறும் போது பிரதேச செயலாளர் அல்லது கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அங்கீகரிக்க வேண்டும். அந் நிதி பொது அபிவிருத்தி விடயங்களுக்காகச் செலவு செய்யப்பட வேண்டும். சங்கம் இயங்காத வேளையில் சங்கத்திற்கு உரிய நிதி மற்றும் சொத்துக்கள் பிரதேச செயலாளரினால் கையேற்கப்பட்டு மீண்டும் புனரமைக்கப்பட்ட சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

16. முன்னேற்ற அறிக்கை :-

அங்கத்துவம்பெற்ற குடும்பங்களின் நன்மைக்காக எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பான விவர அறிக்கை ஒன்றையும்

சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் முன்னேற்றம் தொடர்பான விபர அறிக்கை ஒன்றை ஒரு மாதத்திற்கு ஒரு முறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் மூலம் பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

17. உத்தியோகத்தர்களின் பதவிக் காலம் :-

உத்தியோகத்தர்களின் பதவிக் காலம் இரண்டு வருடங்கள் ஆகும். அவ் இரண்டு வருடங்களும் முடிவடைய முன் உத்தியோகத்தர் ஒருவர் மரணமெய்துமிடத்து அல்லது வேறு முறையில் பதவி வரித்தாகினால் கிராம அபிவிருத்தி சங்கத்தின் உத்தியோகத்தர்களின் பதவிக்குப் பதிலாக ஏதேனுமொரு அங்கத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்ட வேளையில் அவ் அங்கத்தவர் இவ் யாப்பின் ஏற்பாடுகளின் கீழ் அவரின் முன்னோடியில் பதவிக் காலத்தின் நிறைவு பெறாத காலத்திற்காகப் பதவி வகிக்க வேண்டும்.

18. பொது இலட்சினை :-

I. கிராம அபிவிருத்தி/பெண்கள் சங்கத்தின் பொது இலட்சினை, கிராம அபிவிருத்தி சங்கத்தின்/மகளிர் சங்கத்தின் செயலாளரின் பொறுப்பில் இருக்க வேண்டியதுடன் தவிசாளர் அல்லது பொருளாளரின் முன்னிலையில் அன்றி இவ் இலட்சினை உடன்படிக்கை ஒன்றுக்கு அல்லது வேறு உறுதி ஒன்றுக்காக சபைக்காக இடப்படக்கூடாது.

19. யாப்புத் திருத்தம் :-

அடிப்படை நோக்கத்திற்கு மாறாக அன்றி இவ்யாப்பினை தமது அதிகாரப் பிரதேசத்திற்கு ஏற்ற முறையில் திருத்திக் கொள்ளும் உரிமை அங்கத்தவர்களுக்கு உண்டு. அங்கத்தவர்களில் 3/4 பங்கினர் கலந்து கொள்ளும் கூட்டத்திற்கு வருகை தரும் எண்ணிக்கையில் 2/3 பங்கினரின் வாக்கின் அடிப்படையில் யாப்பினைத் திருத்தலாம். அவ்யாய்ப்புத் திருத்தத்திற்கு மாகாண சபையின் கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படவேண்டியதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் நடைமுறைக்கு வரும்.

20. யாப்பின் நோக்கத்திற்கு முரணாக அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்திய கிராம அபிவிருத்தி சங்கம்/மகளிர் சங்கத்தின் பதவியினை இரத்துச் செய்ய மேல் மாகாண சபையின் கிராம அபிவிருத்தி பணிப்பாளருக்கு அதிகாரம் உண்டு.

கீழே கையொப்பமிடும் உத்தியோகத்தர்கள் குழாம் ஆகிய நாங்கள்............................................... (ஆந் திகதி) நடைபெற்ற :.............................................................................. (சங்கத்தின் பெயர்) பொதுச் சபைக் கூட்டத்தில் இந்த யாப்பினை நிறைவேற்றிக் கொண்டோம் எனவும், இதை எங்கள் சங்கத்தின் யாப்புத் தொகுதியாக ஏற்றுக்கொண்டதாகவும் உறுதிப்படுத்துகின்றோம்.

| பதவி | பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| 1. தவிசாளர் | | |
| 2. செயலாளர் | | |
| 3. பொருளாளர் | | |
| 4. பிரதி தவிசாளர் | | |
| 5. பிரதிச் செயலாளர் | | |

## II ஆவது அட்டவணை

மேல் மாகாண கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றை/மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றைப் பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவம்

1. பிரதேச செயலாளர் பிரிவு :----.
2. கிராம உத்தியோகத்தர் பிரிவின் இலக்கமும் பெயரும் :----.
3. கிராம அபிவிருத்தி சங்கத்தின்/மகளிர் சங்கத்தின் பெயர் :----.
4. கிராமத்தின் பதிவு செய்யப்பட்டுள்ள குடும்பத்தின் எண்ணிக்கை :----.

(i) அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை :----.
(ii) அங்கத்தவர்களின் எண்ணிக்கை :----.
(iii) சிறிய அபிவிருத்திப் பிரிவுகளின் எண்ணிக்கை :----.

5. சங்கத்தினை ஆரம்பிப்பதற்காக பொது சபைக் கூட்டம் நடைபெற்ற திகதி :----.

6. (i) தவிசாளராக நியமிக்கப்பட்டவரின் பெயரும் முகவரியும் :----.
(ii) செயலாளராக நியமிக்கப்பட்டவரின் பெயரும் முகவரியும் :----.
(iii) பொருளாராக நியமிக்கப்பட்டவரின் பெயரும் முகவரியும் :----.
(iv) கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள வங்கி :----.
(v) வங்கிக் கணக்கு இலக்கம் :----.

7. சங்கத்தில் காணப்படும் நிதி வளம் : -

| | |
|---|---|
| (i) பொருளாளரின் கையில் காணப்படும் சங்கத்தின் நிதி : | ரூபா ..................................................... |
| (ii) வங்கிகளில் வைப்பில் இடப்பட்டுள்ள நிதி : | ரூபா ..................................................... |
| (iii) காணிகளினதும் கட்டடங்களினதும் பெறுமதி : | ரூபா ..................................................... |
| (iv) உபகரணங்கள் போன்றவற்றின் பெறுமதி : | ரூபா ..................................................... |
| கூட்டுத் தொகை | |

.......................................
செயலாளரின் கையொப்பம் :
திகதி :

.........................................
தவிசாளரின் கையொப்பம்
திகதி :

..................................................................................
கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் கையொபம்
திகதி :

பிரதேச செயலாளரின் அங்கீகாரம் :

பிரதேச செயலாளர்.

## *III* ஆவது அட்டவணை

*கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் யாப்பு*

1. பெயர் :----.

...................................... பிரதேச செயலாளர் பிரிவில் கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை என அழைக்கப்படும்.

2. முகவரி :----.

செயலாளர்,
கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை,
பிரதேச செயலாளர் காரியாலம்,
.....................................................

3. அதிகார பிரதேசம் :................................... பிரதேச செயலாளர் பிரிவாகும்.

4. குறிக்கோள் :

1. கிராம அபிவிருத்தி சங்கங்களை, மகளிர் அபிவிருத்தி சங்கங்களை மேம்படுத்த உதவி வழங்குதல்.
2. அச்சங்கங்களின் நோக்கங்களை நிறைவேற்ற ஒத்தழைப்பினை நல்குதல்.
3. மாவட்ட அதிகார சங்கங்களை அங்கத்துவம் செய்தல்.
4. பிரதேச கிராம அபிவிருத்தி திட்டத்தினைத் தயாரித்தல்.
5. பிரதேச மக்களின் சமய, சமூக மற்றும் கலாசார நிலைமைகளை உயர்த்துதல்.
6. வேறு, சங்கங்கள், தாபனங்கள் மற்றும் இயக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்துதல்.
7. வேறு சங்கங்கள் அத்துடன் இயக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்துதல்.

5. அமைப்பு, அங்கத்துவம், பதவிக்காலம்:

1. பிரதேச செயலாளர் பிரிவின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 51 % கிராம அபிவிருத்தி சங்கத்தை ஸ்தாபித்து பதிவு செய்யப்பட்ட பின் கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

2. பிரதேச செயலாளர் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட நடைமுறை, கிராம அபிவிருத்தி சங்கங்களின் பெண்கள் கிராம

அபிவிருத்தி சங்கங்களின் கௌரவ தவிசாளர் அத்துடன் செயலாளர்களுக்கு கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் அங்கத்துவம் உரித்தாகும்.

3. அப்பிரதேச செயலாளர் பிரிவின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அதன் செயலாளர் ஆவார்.

4. கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் தவிசாளர், பிரதி தவிசாளர், செயற்குழு அங்கத்தவர்கள் 7 பேர் அதிகார சபையின் கூட்டத்தில் தேர்தலின் மூலம் அல்லது இணக்கத்தின் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும். இங்கு நிதி செயற்பாடு இடம்பெறாதபடியால் பொருளாளர் ஒருவராக நியமிக்கப்படுவது இடம்பெறாது.

5. கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் உத்தியோகபூர்வ காலம் 2 வருடங்களாகும். எனினும் கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபைக்கு நியமிக்கப்படும் தவிசாளரின் உத்தியோகபூர்வ காலம் அவர் அங்கத்துவப்படுத்தும் கிராம அபிவிருத்தி சங்கத்தின் உத்தியோகபூர்வ காலத்துக்கு சமனாகும் . பிரதேச அதிகார சபையின் உத்தியோகபூர்வ காலத்துக்கு முன்னர் தவிசாளரின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்தால் பிரதேச அதிகார சபையின் மிகுதிக் காலத்திற்காக வேறு ஒரு அங்கத்தவர் தவிசாளராக நியமிக்கப்பட வேண்டும். உத்தியோகபூர்வ காலம் இரத்தாகும் கிராம அபிவிருத்தி சங்கம் தொடர்பான கால எல்லை அடங்கிய ஆவணம் ஒன்று செயலாளர் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) இனால் கட்டாயமாகப் பேணப்பட வேண்டும்.

6. அங்கத்துவம் இரத்தாகுதல் :

(அ) கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தவிசாளர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்தல் அல்லது அகற்றப்பட்டால் ;

(ஆ) தாம் அங்கத்துவம் பெறும் கிராம அபிவிருத்தி சங்கத்தின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்தால்;

(இ) தொடர்ந்து 3 பிரதேச அதிகார சபை கூட்டங்களுக்கு அறிவிக்காது வருகை தராது இருந்தால் ;

(ஈ) யாப்புக்கு முரணாகச் செயற்பட்டு இருந்தால் (சபையின் 2/3 பங்கு வாக்கின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டு பதவியில் அல்லது அங்கத்துவத்தில் இருந்து அகற்ற இயலும்) ;

(உ) அங்கத்தவரின் மரணம் ;

(ஊ) வசிப்பிடத்தைக் கைவிட்டுச் சென்றிருத்தல்.

7. பொதுச் சபைக் கூட்டம் :

(அ) கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் பொதுச் சபைக் கூட்டம் 3 மாதத்திற்கு ஒரு முறை நடைபெற வேண்டும்;

8. செயற்குழுக் கூட்டம் :

கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் செயற்குழுக் கூட்டம் ஒரு மாத்திற்கு ஒரு முறை நடைபெற வேண்டும்.

9. விசேட பொதுச் சபைக் கூட்டம்/விசேட செயற்குழுக் கூட்டம் :

அங்கத்தவர்கள் 1/3 பங்கினர் எழுத்துமூலமாக வேண்டுகோள் விடுக்கும் இடத்து அல்லது காலத்தின் அவசரமாக தேவை ஒன்றுக்கு இணங்க உரிய அதிகார பிரதேசத்தின் பிரதேச செயலாளருடன் கலந்துரையாடி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் (செயலாளர்) இனால் விசேட பொதுச் சபைக் கூட்டம் ஒன்று/ செயற்குழுக் கூட்டம் ஒன்று கூட்டப்பட வேண்டும்.

10. நிறைவெண் :

கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் பொதுச் சபைக் கூட்டம், விசேட பொதுச்சபைக் கூட்டத்துடன் வருடாந்த பொதுச் சபைக் கூட்டங்களின் நிறைவெண் அங்கத்தவர்களின் 1/3 பங்காக வேண்டும். விசேட செயற்குழுக் கூட்டம் ஒன்றின் நிறைவெண் 1/2 பங்காக வேண்டும்.

11. துணைச் செயற்குழுக்களை நியமித்தல் :

கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபைகளின் செயற்பாடுகளை ஒழுங்காகப் பேணிச் செல்வதற்காக பின்வருமாறு 5 துணைச் செயற்குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். இந்தக் குழுக்களுக்கு உரிய பொறுப்புக்களையும் கடமைகளையும் மேற்கொள்வதற்காக அந்த விடயத்தில் பாண்டியத்தியம் பெற்றவர்களை நியமித்துக்கொள்ளப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

1. சமய மற்றும் கலாசார செயற்குழு.
2. பொருளாதார மற்றும் திட்டமிடல் செயற்குழு.
3. சிரமதான மற்றும் விவசாய செயற்குழு.

4. சுகாதார மற்றும் சுற்றாடல் செயற்குழு
5. கல்வி மற்றும் பயிற்சி செயற்குழு.

இந்த துணைச் செயற்குழுக்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை பிரதேச அதிகார சபையினால் தீர்மானிக்கப்படும். இந்த துணைச் செயற்குழுக்களின் மேற்பார்வை நடவடிக்கை உரிய பிரதேச செயலாளர் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படும்.

12. பிரதேச அதிகார சபைகளைக் கலைத்தல் :

கிராம அபிவிருத்தி பிரதேச சபைகளின் நோக்கங்களுக்கு முரணாகச் செயற்படும், செயற்திறனற்ற அதிகாரத்தை முறையற்ற ரீதியில் உபயோகிக்கும் அல்லது, கிராம அபிவிருத்தி நியதிச் சட்டத்தின் 10 (2) உப பிரிவுக்கு இணங்க ஊழல் அல்லது மோசடி நடைபெற்றுள்ளதென நடைபெற்ற விசாரணையின் போது வெளிக்கொண்டு வரப்பட்டால் அந்தப் பிரதேச அதிகார சபையைக் கலைப்பதற்கு விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

இந்த யாப்பு....................................... ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதென்று இது எங்கள் பிரதேச அதிகார சபையின் அதிகார யாப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றோம்.

.................................... ............................................
தவிசாளர். செயலாளர்.

அங்கத்தவர்கள் :

1. .................................. 3.............................. 5................................ 7. ...............................

2............................... 4................................ 6. ................................

## IV **ஆவது அட்டவணை**

கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபையின் யாப்பு

1. பெயர் :-

...................................... பிரதேச செயலாளர் பிரிவில் கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபை என அழைக்கப்படும்.

2. முகவரி :-

செயலாளர்,
கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபை,
பிரதேச செயலாளர் காரியாலம்,
.....................................................

3. அதிகார பிரதேசம் :.................................... மாவட்டமாகும்.

4. குறிக்கோள் :

1. மாவட்டத்தினுள் கிராம அபிவிருத்தி சங்கங்களை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குதலும் ஆலோசனை மற்றும் உதவிகளை வழங்குதல்.
2. பிரதேச அதிகார சபைகளின் கிராம அபிவிருத்தி திட்டங்களைச் சேகரித்து மாவட்ட அபிவிருத்தி கிராம திட்டத்தினைத் தயாரித்தல்.
3. மாவட்டத்தில் காணப்படும் நிர்வாக அமைப்புகளுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டு மாவட்ட அபிவிருத்தி திட்டத்தினைத் தயாரித்தல்.
4. பெரும்பான்மை இயக்கங்களுடனான நல்லுறவு மேம்படுமாறு செயற்பட்டு மாவட்ட அபிவிருத்தி திட்டத்தினை நடைமுறைப்படுத்த தேவையான ஒத்துழைப்பு நல்குதல்.
5. மாகாண அதிகார சபையினை அங்கத்துவம் செய்தல்.

5. **அமைப்பு, அங்கத்துவம் மற்றும் பதவிக்காலம் :**

1. மாவட்ட அதிகார சபையின் தவிசாளர் கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபைகளின் அங்கத்தவர்களில் இருந்து நியமிக்கப்பட வேண்டும். மாவட்ட கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி நிலையில் அதன் செயலாளராவார். மாவட்ட செயலாளர் பதவி நிலையில் அதன் தலைவர் ஆவார்.
2. மாவட்டத்தின் பிரதேச அதிகார சபைகளின் தவிசாளர்களின் அங்கத்துவத்தில் மற்றும் செயலாளர்களின் அங்கத்துவத்தில் மாவட்ட அதிகார சபை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.
3. மாவட்ட அதிகார சபைகளின் கௌரவ தவிசாளர், பிரதி தவிசாளர், 7 செயற்குழுக்களின் அங்கத்தவர்கள் மாவட்ட அதிகார சபையின் பொதுக் கூட்டத்தில் நியமிக்கப்பட வேண்டும். இங்கு நிதி நடவடிக்கை இடம்பெறாதபடியால் பொருளாளர் ஒருவர் தெரிவு செய்யப்படமாட்டார்.

*கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபை ஒன்றின் உத்தியோகபூர்வ காலம் 2 வருடங்களாகும். எனினும் மாவட்ட அதிகார சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட தவிசாளரின் உத்தியோகபூர்வ காலம் அவர் அங்கத்துவப்படுத்தும் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உத்தியோகபூர்வ காலத்திற்கு சமனாகும். மாவட்ட அதிகார சபையின் உத்தியோகபூர்வ காலத்திற்கு முன்னர் தவிசாளரின் உத்தியோகபூர்வ காலம் இரத்தாகினால் அதிகார சபையின் மிகுதிக் காலத்திற்காக வேறு அங்கத்தவர் ஒருவர் தவிசாளராக நியமிக்கப்படலாம்.*

*6. அங்கத்துவம் இரத்தாகுதல் :*

*(அ) தான் அங்கத்துவம் செய்யும் சங்கத்தின் உத்தியோகபூர்வ காலம் இரத்தாகினால் ;*

*(ஆ) கிராம அபிவிருத்தி சங்கத்தின் தவிசாளர் பதவியில், செயலாளர் பதவியில் இருந்து இராஜினாமா செய்தால் அல்லது அகற்றப்பட்டால் ;*

*(இ) யாப்புக்கு முரணாகச் செயற்பட்டால் ;*

*(ஈ) தொடர்ச்சியாக 3 கூட்டங்களுக்கு அறிவிக்காது வருகை தராவிடத்து அல்லது அங்கத்துவர் மரணமெய்தினால் ;*

*(உ) வசிப்பிடத்தைக் கைவிட்டுச் சென்றிருந்தால்.*

*7. பொதுச் சபைக் கூட்டம் :*

*மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகார சபைக் கூட்டம் 3 மாதத்திற்கு ஒரு முறை நடைபெற வேண்டும்.*

*8. செயற்குழுக் கூட்டம் :*

*கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் செயற்குழுக் கூட்டம் 1 மாத்திற்கு ஒரு முறை நடைபெற வேண்டும்.*

*9. விசேட பொதுச் சபைக் கூட்டம்/விஷேட செயற்குழுக் கூட்டம் :*

*அங்கத்தவர்களின் 1/3 பங்கினர் எழுத்துமூலமாக வேண்டுகோள் விடுக்கும் இடத்து அல்லது காலத்தின் அவசரமான தேவை ஒன்றுக்கு இணங்க கிராம அபிவிருத்தி மாகாண பணிப்பாளருடன் கலந்துரையாடி மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் (செயலாளர்) இனால் விசேட பொதுச் சபைக் கூட்டம் ஒன்று/செயற்குழுக் கூட்டம் ஒன்று கூட்டப்பட வேண்டும்.*

*10. நிறைவெண் :*

*கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபையின் பொதுச் சபைக் கூட்டம், விசேட பொதுச் சபைக் கூட்டங்களின் நிறைவெண் அங்கத்தவர்களின் 1/3 பங்காக வேண்டும். விசேட செயற்குழுக் கூட்டம் ஒன்றின் நிறைவெண் 1/2 பங்காக வேண்டும்.*

*11. துணைச் செயற்குழுக்களை நியமித்தல் :*

*கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபையின் செயற்பாடுகளை ஒழுங்காகப் பேணிச் செல்வதற்காக பின்வருமாறு 5 துணைச் செயற்குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். இந்தக் குழுக்களுக்கு உரிய பொறுப்புக்களையும் கடமைகளையும் மேற்கொள்வதற்காக அந்த விடயத்தில் பாண்டித்தியம் பெற்றவர்களை நியமித்துக்கொள்ளப் பார்த்துக்கொள்ள வேண்டும்.*

*1. சமய மற்றும் கலாசார செயற்குழு.*

*2. பொருளாதார மற்றும் திட்டமிடல் செயற்குழு.*

*3. சிரமதான மற்றும் விவசாய செயற்குழு.*

*4. சுகாதார மற்றும் சுற்றாடல் செயற்குழு.*

*5. கல்வி மற்றும் பயிற்சி செயற்குழு.*

*இந்த துணைச் செயற்குழுக்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை மாவட்ட அதிகார சபையினால் தீர்மானிக்கப்படும். இந்தத் துணைச் செயற்குழுக்களில் மற்றும் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளை நிறைவேற்றுவதற்காக மாகாண அதிகார சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்குரிய தீர்மானம், அங்கீகாரம் மற்றும் ஏற்பாடுகள் மாகாண அதிகார சபையினால் வழங்கப்படும்.*

*12. மாவட்ட அதிகார சபைகளைக் கலைத்தல் :*

*கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபையின் யாப்பிற்கு முரணாகச் செயற்படும், செயற்திறனற்ற அதிகாரத்தை முறையற்ற ரீதியில் உபயோகிக்கும் அல்லது,*

*கிராம அபிவிருத்தி நியதிச் சட்டத்தின் 10 (2) உப பிரிவுக்கு இணங்க ஊழல் அல்லது மோசடி நடைபெற்றுள்ளதென நடைபெற்ற விசாரணையின் போது வெளிக்கொண்டு வரப்பட்டால் அந்த மாவட்ட அதிகார சபையினைக் கலைப்பதற்கு விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.*

இந்த யாப்பு ............................ ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றபட்டதென்றும் இது எங்கள் மாவட்ட அதிகார சபையின் யாப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றோம்.

..........................................
செயலாளர்.

.. .............................................
தவிசாளர்.

அங்கத்தவர்கள் :

1. ..........................................................................
2. ..........................................................................
3. ..........................................................................
4. ..........................................................................
5. ..........................................................................
6. ..........................................................................
7. ..........................................................................

## V ஆவது அட்டவணை

*மாகாண கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபையின் யாப்பு*

1. பெயர் :-

...................................... மாகாண கிராம அபிவிருத்தி அதிகார சபை என்ற பெயரில் அழைக்கப்படும்.

2. முகவரி :-

செயலாளர்,
மாகாண கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபை.
.....................................................
.....................................................

3. அதிகார பிரதேசம் : மேல் மாகாணம் (கொழும்பு/கம்பஹா/களுத்துறை) மாவட்டமாகும்.

4. குறிக்கோள் :

1. தேசிய கொள்கைக்கு இணங்க மாகாண கிராம அபிவிருத்திக் கொள்கையைத் தயாரித்தல்.
2. தமது மாகாண தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தத் தேவையான ஆலோசனையை வழங்குதல்.
3. மாகாண கிராம அபிவிருத்தி நிதியம் ஒன்றினை ஸ்தாபித்தலும் நிர்வகித்தலும்.
4. மாகாணத்தின் கிராம அபிவிருத்திக்குத் தேவையான விசேட செயற்றிட்டங்களை இணங்காணுதல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
5. மாகாண அபிவிருத்தி பயிற்சி நடவடிக்கை.
6. கிராம அபிவிருத்தி சங்கங்கள், பிரதேச கிராம அபிவிருத்தி மாவட்ட கிராம அபிவிருத்தி சபைகளுக்கு இடையே ஒழுங்கான தொடர்பு ஒன்றினை ஏற்படுத்துதல் மற்றும் அச்சங்கங்கள் அத்துடன் அதிகார சபைகளில் இருந்து கிடைக்கும் பிரேரணைகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாகக் கவனத்தைச் செலுத்தி, தீர்மானம் எடுத்தல், தேவையான பரிந்துரை மற்றும் வழிகாட்டல்களை மேற்கொள்ளல்.

5. அமைப்பு :

1. மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர்.
2. மூன்று மாவட்டங்களினதும் அதிகார சபைகளின் தவிசாளர்கள் மற்றும் மூன்று மாவட்டங்களினதும் அதிகார சபைகளின் அங்கத்தவர்களில் ஒரு மாவட்டத்துக்கு ஒருவர் வீதம் அமைச்சரினால் நியமிக்கப்படும் மூன்று அங்கத்தவர்கள்.
3. மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் /மூன்று மாவட்டங்களும் உள்ளடங்குமாறு கிராம அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர்கள் மூன்று பேர்.
4. மாகாண உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்.
5. ஒவ்வொரு மாவட்ட கிராம அபிவிருத்தி சபையினதும் தவிசாளர்கள், செயலாளர்கள் கிராம அபிவிருத்தி பணிப்பாளரின் அங்கத்துவத்தில் மாகாண அதிகார சபை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

6. அங்கத்துவம் :

(அ) மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகார சபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள் ;

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படும் அங்கத்தவர்கள் ;

(இ) கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் ;

(ஈ) கிராம அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் ;

(உ) மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

7. அங்கத்துவம் இரத்தாகுதல் :

1. தான் அங்கத்துவம் செய்யும் சங்கத்தின் உத்தியோகபூர்வ காலம் இரத்தாகினால்.

2. பிரதேச அதிகார சபை ஒன்றின்/மாவட்ட அதிகார சபை ஒன்றின் தனது பதவி மற்றும் அங்கத்துவம் இரத்தாகுதல்.

3. இராஜினாமா செய்வதினால்.

4. யாப்புக்கு முரணாகச் செயற்படுவதினால்.

5. வசிப்பிடத்தைக் கைவிட்டுச் சென்றிருந்தால்.

6. மரணமடைந்திருந்தால்.

8. மாகாண அதிகார சபையின் தலைவரை நியமித்தல் :

மாகாண அதிகார சபை, மாவட்ட அதிகார சபையின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுள் மூன்று மாவட்டங்களும் அங்கத்துவம் பெறுமாறு விடயப்பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்படும் மூன்று பேர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்களிடையே அமைச்சரினால் நியமிக்கப்படும் நபர் ஒருவர் மாகாண அதிகார சபையின் தலைவராதல் வேண்டும்.

மாகாண அதிகார சபையின் செயலாளர் உதவி கிராம அபிவிருத்தி பணிப்பாளராக வேண்டும்.

9. கூட்டம் :

மாகாண அதிகார சபையின் கூட்டம் ஒவ்வொரு மாதத்திற்கு ஒருமுறை நடைபெற வேண்டும். அதன் நிறைவெண் 6 ஆக வேண்டும்.

10. நிதியம் :

(1) மாகாண அதிகார சபையின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏற்பாட்டினை வழங்கவும் மற்றும் செலவு செய்யவும் நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்படுகின்றது.

(2) இந்த நிதியத்தின் கணக்கிற்குக் கீழே காணப்படும் மூலங்களில் இருந்து நிதி பணமனுப்பல் செய்யப்படுகின்றது.

(i) அரசிடம் இருந்து கிடைக்கும் மானியம்;

(ii) மாகாண சபை நிதியத்தில் இருந்து கிடைக்கப்பெறும் மானியங்கள் ;

(iii) கிராம அபிவிருத்தி சங்கங்களின் ஒப்பந்தச் சேவைகளில் இருந்து கிடைக்கப்பெறும் பலாபலன்களின் 1/5 பங்கு ;

(iv) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நபர்களிடம் இருந்து அல்லது தாபனங்களின் மூலம் (அன்பளிப்பு, உதவி) ஆகக் கிடைக்கப்பெறும் நிதி.

(v) வேறு சட்டரீதியான வழிகளில் கிடைக்கப்பெறும் வருமானம்.

(3) இந்த நிதி இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி போன்ற அரச வங்கி ஒன்றின் சேமிப்பு கணக்கொன்றில் அல்லது நடைமுறைக் கணக்கொன்றில் வைப்பில் இடப்பட வேண்டும்.

(4) இந்த நிதியினை மீண்டும் பெற்றுக்கொள்ளும் போது கிராம அபிவிருத்தி மாகாண பணிப்பாளர், செயலாளர் (உதவி கிராம அபிவிருத்தி பணிப்பாளர்) அரசுக்காக கையொப்பமிட வேண்டியதுடன் மாகாண அதிகார சபைக்காக தவிசாளர் அல்லது பெயர் குறிப்பிடப்படும் மாகாண அங்கத்தவர் ஒருவர் கையொப்பமிட வேண்டும்.

11. நிதி நடவடிக்கை கணக்கு வைப்பு மற்றும் கணக்காய்வு :

1. இந்த நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் எல்லாக் கொடுப்பனவுகளும் விதிகளின் மூலம் நியமப்படுத்தப்பட்ட முறையில் இடம்பெற வேண்டும்.

2. நிதியத்தின் தேவைப்படாத எல்லா நிதியமும் உடனடியாக அரச வங்கி ஒன்றில் அல்லது அரச நிதியம் ஒன்றில் முதலீடு செய்யப்பட வேண்டும்.

3. இந்த நிதியத்தின் கணக்குக்கட்டுப்பாடு அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படுவதுடன் நிதிக்கொடுக்கல் வாங்கல் தொடர்பான வருடாந்த வரவு செலவுத் திட்ட அறிக்கை, கணக்கின் கணக்கறிக்கை அவரினால் மேல் மாகாணத்தின் கிராம அபிவிருத்தி விடயப்பொறுப்பு அமைச்சரின் மூலம் மேல் மாகாண சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

4. அதன்நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டு ஒன்றாக வேண்டும்.

5. ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டு ஒன்றும் நிறைவடைந்த பின்னும் கணக்கு மற்றும் வருடாந்த அறிக்கை இயன்ற விரைவில் கிராம அபிவிருத்தி பணிப்பாளரினால் தயாரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டு ஒன்றுக்காக முழுமையாகவும் உசிதமாகவும் கணக்கினைப் பேணிச் செல்வதற்கு மாகாண அதிகார சபையின் செயலாளரினால் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

6. அமைச்சரினால் இயன்ற விரைவில் ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்திற்குமான வருடாந்த அறிக்கையும் நிதியத்தின் கணக்காய்வு அறிக்கையும் மேல் மாகாண சபைக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

12. நிதியினைச் செலவு செய்தல் :

பின்வரும் செலவுகள் மாகாண அதிகார சபையின் சிபாரிசின் கீழ் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ள இயலும்.

1. கிராம அபிவிருத்தி சங்கங்களினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் பிரதேச/மாவட்ட /மாகாண அதிகார சபை அங்கீகரித்த செயற்றிட்டத்தில் சிறப்பினை அடிப்படையாகக் கொண்டு முதலீடு செய்தல்.

2. மாகாணத்தின் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மேம்பாட்டிற்காக தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காகச் செலவு செய்தல்.

3. கிராம அபிவிருத்தி சங்கங்களின் மேம்பாட்டிற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காகச் செலவு செய்தல்.

4. பிரதேச/மாவட்ட/மாகாண அதிகார சபைகளுக்கான நிர்வாகச் செலவு.

5. கிராம அபிவிருத்திக்காக ஒத்துழைப்பு நல்கும், சமூக பொருளாதார, கலாசார ரீதியிலான, சமய ரீதியிலான அபிவிருத்திக்குரிய செலவுகள்.

13. நிதி மோசடி, முறைகேடு, ஊழல் அல்லது முறையற்ற பாவனை:

1. யாப்பு ரீதியாக நியமிக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றில், பிரதேச அபிவிருத்தி சங்கம் ஒன்றில், மாவட்ட அதிகார சபையில் நிதியில் மோசடி, முறைகேடு, ஊழல் முறையற்ற பாவனை நிகழ்ந்துள்ளதென அறிவிக்கப்படும் வேளையில் கிராம அபிவிருத்தி பணிப்பாளரினால் விசேடமாக அதிகாரம் ஒப்படைக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவரின் மூலம் ஆரம்ப அறிக்கை ஒன்றினைப் பெற்றுக்கொண்ட பின்னர் அவ்வாறு மோசடி, முறைகேடு, ஊழல், முறையற்ற பாவனை நிகழ்ந்துள்ளதென திருப்திப்படுத்தக்கூடிய முறையில் போதுமான காரணங்கள் இருக்கும் இடத்து அல்லது 6 மாத காலங்களாக அவ்வதிகார சபை இயங்காது உள்ளதென்பதற்குப் போதுமான காரணங்கள் இருக்குமிடத்து அந்த அதிகார சபையைக் கலைத்து விடுவதற்கு உரிய விடய பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

2. கலைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றுக்கு அல்லது கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை ஒன்றுக்கு அல்லது மாவட்ட அதிகார சபை ஒன்றுக்கு அல்லது மாகாண அதிகார சபை ஒன்றுக்கு உரிய எல்லா அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், கணக்கேடுகள், அங்கத்துவப் பெயர் பட்டியல்கள் மற்றும் உபயோகத்திற்கு உரிய எல்லாக் கோப்புக்களும் கிராம அபிவிருத்தி அமைச்சுக்கு ஒப்படைக்கப்படுகின்றது. அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் உத்தியோகத்தருக்கு அந்தச் சொத்துக்களை ஒப்படைத்து விடுபடும் வரை கலைக்கப்பட்ட உத்தியோகத்தர் குழாம் தமது பொறுப்புக்களில் இருந்து மீள முடியாது.

14. பதவிக் காலம் :

மாகாண அதிகார சபையின் பதவிக் காலம் 2 வருடங்களாகும். நியமிக்கப்பட்ட தவிசாளரின் உத்தியோகபூர்வ காலம் அவர் அங்கத்துவம் செய்யும் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உத்தியோகபூர்வ காலத்திற்கு முன்னர் இரத்தாகினால் மிகுதிக் காலத்திற்கு வேறு ஒரு அங்கத்தவர் தவிசாளரினால் அதிகார சபைக் கூட்டத்தில் விடயப் பொறுப்பு அமைச்சரின் இணக்கத்துடன் தெரிவு செய்யப்பட வேண்டும்.

*15. பொது இலட்சினை :*

*மாகாண அதிகார சபையின் பெயரில் பொது இலட்சினை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.*

*16. யாப்பு திருத்தம் :*

*அடிப்படை நோக்கத்திற்கு முரணாகாதபடி இந்த யாப்பை தமது மாகாணத்திற்கு ஏற்ற முறையில் திருத்தும் அதிகாரம் மாகாண அதிகார சபைக்கு உண்டு. அங்கத்தவர்கள் பங்குபற்றும் கூட்டத்தில் 2/3 வாக்கின் அடிப்படையில் யாப்புத் திருத்தத்தை மேற்கொள்ள இயலும். அந்த யாப்பு திருத்தித்திற்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட தினத்தில் இருந்து அது நடைமுறைக்கு வரும்.*

*.......................................... ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதென்றும், இது எங்கள் மாகாண அதிகார சபையின் யாப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றோம்.*

| | | |
|---|---|---|
| .......................................................... | .................................................. | ................................................ |
| *தவிசாளர்.* | *கி. அ. பணிப்பாளர்.* | *செயலாளர்.* |

VI ஆவது அட்டவணை

**போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி,**
**உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை,**
**கிராம அபிவிருத்தி அமைச்சு**
***(மேல் மாகாணம்)***

***கிராம அபிவிருத்திச் சங்கத்தை/மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தை***
***பதிவு செய்யும் சான்றிதழ்***

*பிரதேச செயலாளர் பிரிவு :*.............................................................................................................................................
*கிராம உத்தியோகத்தர் பிரிவு :*.........................................................................................................................................
...........................................................................................................................................................................

*கிராமத்தில்/கொலனியில்/தோட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள* .........................................................................................

*கிராம அபிவிருத்தி சங்கம்/மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம்* ..............................................................................
*இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

.....................................................
*பிரதேச செயலாளர்.*

*திகதி :*..............................

*சங்கத்தின் பொறுப்புச் சபை அடுத்த பக்கத்தில் காட்டப்பட்டுள்ளது.*

| நியமிக்கப்பட்ட திகதி | பொறுப்புச் சபை | | | பிரதேச செயலாளரின் கையொப்பம் | திகதி |
|---|---|---|---|---|---|
| | கௌரவ தவிசாளர் | கௌரவ செயலாளர் | கௌரவ பொருளாளர் | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

9- 293

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.